[1973 ஏப்ரல் 2

மதுராந்தகம் ஏரியில் தூர் எடுத்தல்

*606 வினா—திரு. சி. ஆறுமுகம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் ஏரி தூர் வாருவது குறித்து அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, 1968-ம் ஆண்டு தமிழகத்திலே வறண்ட நிலை இருந்தபோது நம்முடைய அமைச்சரவர்கள் மத்திய தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களைத் தமிழகத்திற்கு அழைத்து வந்து மதுராந்தகம் ஏரியை மட்டுமே காட்டினார்கள். ஆனால் அப்படிப்பட்ட அந்த ஏரியைச் செப்பனிட ஒதுக்கப்பட்ட தொகை ஒரு லட்சம் ரூபாய் தான். சாதாரண ஏரிகளுக்கெல்லாம் பல லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்படும்போது, மதுராந்தகம் ஏரிக்கு மட்டும் அதிகம் செலவு செய்ய அரசுக்கு மனம் இல்லையா அல்லது திட்டங்களை பொறியாளர்கள் தயாரித்து அரசுக்கு அனுப்ப வில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மனமும் இருக்கிறது; மார்க்கமும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னை அழைத்துக் கொண்டு காண்பித்த பிறகு, அதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு அதைப் பரிசிலனை செய்ய பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். பொறியாளரின் அறிக்கை வந்தவுடன் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, நம்முடைய அரசு பதவியேற்றபோது பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள்—எந்த அமைச்சரும் ஏறி பார்க்காத ஏரியை—அந்த ஏரியைச் சுற்றி நடந்து, முழுவதுமாகப்

1973 ஏப்ரல் 2]

பார்த்தார்கள். அப்போது அந்த ஏரிக்கு அதிகத் தொகை செலவு செய்ய வேண்டுமென்று அனுப்பிய குறிப்புகள் அரசிடம் இருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தக் குறிப்புகளே அடிப்படையாகக் கொண்டுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படுவதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister whether desilting programme for the entire State is there with Government. If not, may I know whether this Government will press on the Central Government to allot funds for desilting of all tanks in the entire State?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : It is a very big question. The hon. Member may put a separate question and I can then give a detailed answer.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது நம்பப்படுகிறது என்றும் சொன்னார்கள். ஆகவே, அதை நம்பலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வீரபாண்டி ஆறுமுகம் அவர்களுக்கு சந்தேகம் வந்திருக்கிறது. ஆனல் மதுராந்தகம் ஆறுமுகத்திற்கு சந்தேகம் வரவில்லை. அவர் நம்புகிறார்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, மதுராந்தகம் ஏரி தமிழ் நாட்டிலேயே பெரிய ஏரி என்று சொல்லப்படுகிறது. அப்படியானல் அடுத்தபடியாக இருக்கக்கூடிய பெரிய ஏரி எது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தமிழ் நாட்டிலே பெரிய ஏரிகள் பல இருக்கின்றன. இராமநாதபுரத்தில் ஒரு பெரிய ஏரி இருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டத்திலே செம்பரம்பாக்கம் ஏரி இருக்கிறது. தனியாகக் கேள்வி போட்டால் வரிசைப்படுத்தி தகவல் கொடுக்கலாம்.

திரு. சீ. க. வடிவேலு : தலைவரவர்களே, பழுதடைந்து இருக்கின்ற ஏரிகளின் "வரத்து வாய்க்கால்" வேலைகளைச் செய்வதற்கு குடிமராமத்து மூலமாகச் செய்ய வேண்டுமென்ற ஒரு உத்தரவு இருப்பதால் நல்ல முறையில் அவை செய்யப்படாமல் இருக்கின்றன. ஆகவே, அரசாங்கம் அந்த வேலைகளுக்கு அதிக நிதி உதவி செய்யவோ அல்லது அரசாங்கமே நேரடியாக மராமத்து செய்யவோ நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது இருக்கின்ற சட்டப்படி குடி மராமத்து மூலமாகத் தான் வரத்து வாய்க்கால் வேலைகள் செய்யப்படும். அந்த வேலைகளை பி.டபிள்யூ.டி. மூலம் செய்யலாமா என்று ஒரு குறிப்பு அரசின் தீவிர ஆய்வில் இருக்கிறது. அதைப்பற்றி விரைவாக ஒரு முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

New tank at Thoppanpatti

* 607 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there are proposals to undertake the construction of a tank across the Aranmanai Odai in Thoppanpatti village in Dindigul; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தினால் 70.75 ஏக்கர் பாசன வசதி பெறுவதோடு 150 ஏக்கர் புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாற்றப்படும். இதனால் 142 டன் அதிக உணவு உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது.

Radial bus services

* 608 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state the details of the Radial Bus Services to be introduced in Madras City by the Pallavan Transport Corporation during the year 1973?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சிறப்பு அதிகாரியின் பரிவுரைகளைக் கொள்கையளவில் ஏற்றுக்கொள்வதெனப் பல்லவன் போக்குவரத்துக் கழகம் முடிவு செய்துள்ளது.